25.03.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

**25 கால்நடை கிளை நிலையங்கள் கால்நடை மருந்தகங்களாக தரம் உயர்வு**

வரும் நிதியாண்டில், 25 கால்நடை கிளை நிலையங்கள், கால்நடை மருந்தகங்களாகத் தரம் உயர்த்தப்படும் என நிதி நிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக நிதி நிலை அறிக்கையில் கூறியிருப்பதாவது: தமிழக அரசால், கால்நடைத் துறை கட்டமைப்பு மேம்பாட்டுக்கென பெருமளவில் நிதி வழங்கப்பட்டுள்ளது. கடந்த 4 ஆண்டுகளில் நபார்டு வங்கி உதவியுடன் ரூ.282.49 கோடி மதிப்பிலான கட்டட கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதுவரை, 785 கால்நடை கிளை நிலையங்கள், கால் நடை மருந்தகங்களாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

மேலும் புதிதாக 100 கால்நடை கிளை நிலையங்களும், 20 கால்நடை மருந்தகங்களும் அமைக்கப்பட்டுள்ளன. வரும் நிதியாண்டில், மேலும் புதிதாக 25 கால்நடை கிளை நிலையங்கள், கால்நடை மருந்தகங்களாகத் தரம் உயர்த்தப்படும்.

தீவன உற்பத்திக்கு ரூ.25 கோடி: தீவன உற்பத்தியை உயர்த்துவதற்காக, ஒவ்வொரு ஆண்டும் ரூ.25 கோடியில் பல்வேறு தீவன உற்பத்தி வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. வறட்சி காலங்களில் தீவனத் தட்டுப்பாட்டைப் போக்குவதற்கு, ரூ.18.50 கோடியில் 185 தீவனக் கிடங்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ், ரூ.39.65 கோடியில் 33,360 ஏக்கர் அளவிலான விவசாயிகளின் நிலங்கள் தீவனப் பயிர் உற்பத்தியின் கீழ்

கொண்டு வரப்பட்டுள்ளன. வரும் நிதியாண்டிலும், தீவன உற்பத்தி மேம்பாட்டுக்கென ரூ.25 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

பால் வளத் துறைக்கு ரூ.100.68 கோடி: ஆவின் நிறுவனத்துக்கும், அதன் உறுப்பு கூட்டுறவு அமைப்புகளுக்கும் தேவையான நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது. இதன் வாயிலாக தொடக்க பால் கூட்டுறவு சங்கங்களின் சராசரி பால் கொள்முதல் நாளொன்றுக்கு 30 லட்சம் லிட்டராக உயர்ந்து, விவசாயிகளுக்கு அதிக வருவாய் அளித்து வருகிறது.

கடந்த 4 ஆண்டுகளில், ஆவின் நிறுவனத்தின் கட்டமைப்பை மேம்படுத்துவதற்கென ரூ.409.94 கோடி நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது. பால் வளத் துறைக்கு, வரும் நிதியாண்டில் ரூ.100.68 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என நிதி நிலை அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**பஞ்சகவ்யம்: விவசாயிகளுக்கு வரப்பிரசாதம்!**

பயிர்களின் வளர்ச்சியை ஊக்குவித்து நோய் எதிர்ப்புச் சக்தியைத் தரக்கூடிய இயற்கை ஊட்டச் சத்து உரமாக விளங்குவது பஞ்சகவ்யம். இதைக் கொண்டு பயிர்களையும், மண்ணின் தன்மையையும் மேம்படுத்தலாம் என்று வேளாண் துறை தெரிவித்தது.

இதுகுறித்து திருவள்ளூர் வேளாண் உதவி இயக்குநர் அலுவலகம் வெளியிட்ட தகவல்கள்:

உணவுப் பயிர்களில் பயன்படுத்தப்பட்டு வரும் செயற்கை ரசாயன உரங்கள், பூச்சிக் கொல்லி மருந்துகள் கேடு விளைவிப்பதாக உள்ளன.

இதில் இருந்து மீளும் வகையில் விவசாயிகளுக்கு இயற்கை வழியாகவும், பசுமாட்டின் வாயிலாகவும் கிடைக்கப் பெரும் பஞ்சகவ்யம் பயனுள்ளதாக இருக்கும் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

**பஞ்சகவ்யம் தயாரிக்கத் தேவையானவை:** பசுவின் புது சாணம் 5 கிலோ. பசுவின் கோமியம் 3 லிட்டர், பசு மாட்டுப் பால் 2 லிட்டர், பசுந்தயிர் 2 லிட்டர், பசு நெய் 1 லிட்டர், கரும்புச் சாறு 3 லிட்டர், இளநீர் 2 லிட்டர்,

வாழைப்பழம் 12, கள் (கிடைக்கும் இடங்களில்) 2 லிட்டர் ஆகியவை தேவை.

கரும்புச் சாறு கிடைக்கவில்லையென்றால் 500 கிராம் நாட்டுச் சர்க்கரையுடன் 200 கிராம் ஈஸ்டு சேர்த்து 3 லிட்டர் நீரில் ஊற வைத்தால் 30 நிமிடங்களில் அதே தன்மையுடைய கரைசல் கிடைக்கும்.

**தயாரிக்கும் முறை:** பசுவின் புது சாணம், கோமியம், நெய் ஆகியவற்றை நன்கு கலந்து 3 நாள்களுக்கு அடிக்கடி கலக்கி வைக்கவும். நான்காம் நாள் இந்தக் கலவையுடன் இதர பொருள்களான தயிர், நெய், கரும்புச் சாறு, இளநீர், வாழைப்பழங்கள், கள் ஆகியவற்றை அதனுடன் கலக்க வேண்டும். இந்தக் கலவையை குறைந்த பட்சம் 4 நாள்கள் நன்றாக கலக்கி 15 நாள்கள் வைத்திருந்து 19-ஆம் நாள் முதல் பயிர்களில் தெளிக்கலாம்.

**பஞ்ச கவ்யத்தில் உள்ள சத்துக்கள்:** பசும் சாணம், பாக்டீரியா, பூஞ்சானம், நுண் சத்துக்கள்.

**பசு கோமியம்:** பயிர் வளர்ச்சிக்குத் தேவையான தழைச்சத்து.

**பால்**: புரதம், கொழுப்பு, மாவு, அமினோ, அமிலம், கால்சியம் சத்துக்கள்.

**தயிர்**: ஜீரணிக்கத் தக்க செரிமானத் தன்மையைத் தரவல்ல நுண்ணியிரிகள்.

நெய் : வைட்டமின் ஏ.பி.கால்சியம், கொழுப்புச் சத்து.

**கரும்புச் சாறு**: சைக்கடோகைனின் எனும் வளர்ச்சி ஊக்கி, அனைத்து வகை தாது உப்புக்கள்.

**இளநீர்**: நுண்ணுயிர் வளர்ச்சிக்கான இனிப்பு.

**வாழைப்பழம், பதநீர்:** தாது உப்புக்கள் தரவல்லது. நொதிப்பு நிலை தந்து நுண்ணூட்டச் சத்தை உருவாக்குகின்றன.

முறையாக தயாரிக்கப்பட்ட பஞ்ச கவ்யத்தில் பயிர் வளர்ச்சிக்கும், நோய் எதிர்ப்புக்கும், உறுதுணையாக விளங்கும் நுண்ணுயிர்களான

அசோபைரில்லம், அசட்டோபேக்டர், பாஸ்போபாக்டீரியா, சூடோமோனாஸ் ஆகியவையும், பேரூட்டச் சத்துக்கள், நுண்ணூட்டச் சத்துக்கள், வளர்ச்சி ஊக்கிகள் உள்ளிட்ட பயிர்களுக்குத் தேவையான அனைத்தும் உள்ளன.

**பயிர்களுக்குப் பயன்படுத்தும் முறை**: முறையாக தயாரிக்கப்பட்ட பஞ்சகவ்யம் 300 மில்லி மருந்தை 10 லிட்டர் நீரில் கலந்து விசைத் தெளிப்பான், கைத் தெளிப்பான் மூலம் எல்லா பயிர்களுக்கும் படும் வகையில் காலை அல்லது மாலை வேளைகளில் தெளிக்கலாம். ஒரு ஏக்கர் பயிருக்கு ஒரு முறை தெளிக்க 3 லிட்டர் பஞ்சகவ்யம் தேவைப்படும். இந்தக் கரைசலைத் தெளிப்பான்களில் ஊற்றிப் பயன்படுத்தும்போது கைத் தெளிப்பான் எனில், வடிகட்டியும், விசைத் தெளிப்பான் எனில் அதன் வால்வு, குழாயின் நுனிப் பகுதியை பெரிதாக்கிக் கொண்டும் பயன்படுத்த வேண்டும்.

இந்த முறைகளில் பஞ்சகவ்யத்தைப் பயன்படுத்தி விவசாயிகள் தங்களது பயிர்களை இயற்கை வழியில் பராமரித்துப் பயன் பெறலாம் என வேளாண் துறையினர் கூறினர்.

ஒரு ஹெக்டேரில் 25 டன் சப்போட்டா



சிவகங்கை மாவட்டத்தில் சப்போட்டா பழ சாகுபடி சராசரியாக 300 ஏக்கர் பரப்பில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இவற்றில் கிரிக்கெட் பால், பி.கே.எம் 1, ஓவல் ஆகிய ரகங்கள் அதிகமாக பயிரிடப்பட்டுள்ளன.

மணில்காரா அக்ரஸ் என்பது இதன் தாவரவியல் பெயர். இது சப்போட்டேசியோ குடும்ப வகையினைச் சேர்ந்தது. சப்போட்டா ஒரு வெப்ப மண்டல பழப்பயிர். இந்தப் பயிர் அனைத்து வகை மண்ணிலும் செழித்து வளரக் கூடியது. இதனை 1000 மீட்டர் உயரம் வரை உள்ள நிலங்களில் சாகுபடி செய்யலாம். ஜூன் முதல் ஆகஸ்ட் வரை நடவுக்கு ஏற்றக்காலம்.

இது குறித்து தோட்டக்கலை உதவி இயக்குனர் கி. வெங்கடேஸ்வரன் கூறும் போது: சப்போட்டாவில், கோ1, கோ2, கோ3, பி.கே.எம்1, பி.கே.எம்2, பி.கே.எம்3, பி.கே.எம்4, பி.கே.எம்.5, கிரிக்கெட் பால், ஓவல் பாராமசி, தகரக்குடி, கீர்த்தபாரத்தி, பாலா, காளிப்பட்டி, மற்றும் துவாரப்புடி

ஆகிய ரகங்கள் உள்ளன. ஒட்டுக்கன்றுகளும் சாகுபடிக்கு பயன்படுத்தப்படுகின்றன.

ஒரு மீட்டர் அளவு குழி தோண்டி அதில் 10 கிலோ தொழுஉரம் 1 கிலோ வேப்பம் புண்ணாக்கு 100 கிராம் லிண்டேன் மருந்து ஆகிய கலவையினை இட்டு குழியின் நடுவில் சப்போட்டா கன்றின் ஒட்டுப்பகுதி தரையில் இருந்து 15 செ.மீட்டருக்கு மேல் உள்ளவாறு நடவு செய்ய வேண்டும். நடவு செய்த உடனும், நட்ட 3 வது நாளும், பிறகு 10 முதல் 15 நாள்கள் இடைவெளியிலும், தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

ஒரு ஆண்டு முடிந்தபின் செடி ஒன்றுக்கு 10 கிலோ தொழுஉரம், 200 கிராம் தழைச்சத்து, 200 கிராம் மணிச்சத்து, 300 கிராம் சாம்பல் சத்து என்ற அளவில் சப்போட்டா செடிக்கு உரமிட வேண்டும். 5 ஆண்டுகளுக்கு பிறகு 50 கிலோ தொழுஉரம், ஒரு கிலோ தழைச்சத்து, ஒரு கிலோ மணிச்சத்து, 1.5 கிலோ சாம்பல் சத்து இட வேண்டும். நீர்ப் பாசன வசதி உள்ள பகுதிகளில் கோடை காலத்தில் ஒரு முறையும், மழைக் காலங்களில் ஒரு முறையும் என இரண்டாகப் பிரித்துக் கொள்ள வேண்டும். இதன் மூலம் செடிகளின் வளர்ச்சி சீராக இருப்பதோடு, உரச் சேதமும் தடுக்கப்படும்.

ஒட்டு கன்றுகளில் ஒட்டுப்பகுதிகளின் கீழே தழைத்து வரும் வேர்ச்செடியின் தளிர்களை அவ்வப்போது அகற்ற வேண்டும். சுமார் 2 அடி உயரம் வரை கிளைகள் எதுவும் விரிந்து செல்லாமல் பார்த்து கொள்ள வேண்டும். சப்போட்டாவில் கவாத்து செய்தல் தேவையில்லை.

சப்போட்டாவை தாக்கக் கூடிய மொட்டுப் புழுவினை கட்டுப்படுத்த பாசலோன் 35 ஈசி 2 மில்லி லிட்டர் அல்லது பாஸ்போமிடான் 40 எஸ்.எல். 2 மில்லி லிட்டார் அல்லது 5 சதவீதம் வேப்பங்கொட்டை சாறு தெளித்துக் கட்டுப்படுத்தலாம். இதில் காணப்படும் கம்பளிப் புழுவினை கட்டுப்படுத்த குளோரோபைரஸ் 20 ஈசி 2 மில்லி லிட்டர் கலந்து தெளிக்க வேண்டும். பிணைக்கும் புழுவைக் கட்டுப்படுத்த பாசலோன் 35 ஈசி 2 மில்லி லிட்டர் கலந்து தெளிக்க வேண்டும்.

சப்போட்டாவில் கரும் புஞ்சாண நோயைக் கட்டுப்படுத்த 1 கிலோ மைதா அல்லது ஸ்டாரிச்வினை 5 லிட்டர் தண்ணீரில் கலந்து கொதிக்க வைக்க வேண்டும். ஆறிய பின் 20 லிட்டர் தண்ணீரில் (5 சதவீதம்) கலந்து தெளிக்க வேண்டும்.

முதிர்ந்த காய்கள் வெளிரிய பழுப்பு நிறத்திலும் அதன் சதைப்பகுதி வெளிரிய மஞ்சள் நிறத்திலும் இருக்கும் போது அறுவடை செய்ய வேண்டும். செப்டம்பர் முதல் அக்டோபர் மாதம் வரை அறுவடை செய்யலாம். அறுவடை செய்த பழங்களை 5000 பி.பி.எம் எத்ரல் (5 மில்லி லிட்டர்) 10 கிராம் சோடியம் ஹைட்ராக்ஃஸடு கலவையுடன் காற்றுப்புகாத அறையில் வைப்பதனால் பழங்கள் பழுப்பதற்கு ஏற்றதாக இருக்கும். இந்த முறையில், ஒரு ஹெக்டேரில் சப்போட்டா பயிர் செய்தால் ஒரு ஆண்டுக்கு 20 முதல் 25 டன் வரை மகசூல் எடுக்கலாம்.

## பல்லடத்தில் விதைப் பரிசோதனை நிலையம் அமைக்கக் கோரிக்கை

பல்லடத்தில் புதிய விதை பரிசோதனை நிலையம் அமைக்க வேண்டும் என தமிழ்நாடு தனியார் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதுகுறித்து, சங்கத்தின் மாநில செயலர் சி.காளிதாஸ் செய்தியாளர்களிடம் கூறியது:

தமிழகத்தில் அரசு, கூட்டுறவு, தனியார் துறை சார்பில் அறிவிக்கப்பட்ட ரகங்களில் சுமார் 85 ஆயிரம் மெட்ரிக் டன் சான்று பெற்ற விதை நெல், பயிர் வகைகள், பருத்தி உள்ளிட்டவை உற்பத்தி செய்யப்பட்டு வருகின்ற

ன. இதில், 45 சதவீதம் திருப்பூர் மாவட்டத்தின் பங்களிப்பாகும். 2009-ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட திருப்பூர் வருவாய் மாவட்டத்திற்கு பல்லடத்தை தலைமை இடமாகக் கொண்டு விதைப் பரிசோதனை நிலையத்துடன் கூடிய, விதைச் சான்று உதவி இயக்குநர் அலுவலகம்

அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை வேளாண்மை துறை முன் நீண்ட நாள்களாக நிலுவையில் உள்ளது.

உரிய நேரத்தில் கட்டுபடியான விலையில், தரமான சான்று விதைகள் தட்டுப்பாடின்றி விவசாயிகளை சென்றடைய வேண்டும் என்ற அரசின் எண்ணத்தை நிவர்த்தி செய்யும் பொருட்டு இக்கோரிக்கையை உடனடியாக நிறைவேற்ற வேண்டும்.

அதேபோல, நெல்லுக்கான ஆதாரா விலையாக மோட்டா ரகம் குவிண்டாலுக்கு ரூ. 1360, சன்ன ரகம் ரூ. 1400 என மத்திய அரசு நிர்ணயம் செய்துள்ளது. இத்துடன் மாநில அரசு வழங்கும் இடை நிகழ் செலவுக்கான ஊக்கத்தொகையையும் சேர்த்து மோட்டா ரகம் ரூ. 1410, சன்ன ரகம் ரூ. 1470 என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

உயர்ந்து வரும் உற்பத்தி செலவு, விளைச்சல் குறைபாடுகள் காரணமாக சாகுபடி பரப்பு குறைந்து வரும் நிலையில், நெல் உற்பத்தி செய்யும் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கும் பொருட்டு வரும் மத்திய பட்ஜெட்டில் குறைந்தபட்ச ஆதரவு விலையை ரூ. 1800 ஆக நிர்ணயம் செய்ய மாநில அரசு பரிந்துரை செய்ய வேண்டும். இடைநிகழ் செலவுக்கான ஊக்கத்தொகையை குவிண்டாலுக்கு ரூ. 200 என உயர்த்தி வழங்க வேண்டும் என்றார்.

**தம்மம்பட்டி சந்தைக்கு கொல்லிமலைப் புளி வரத்து தொடக்கம்**

சேலம் மாவட்டம், தம்மம்பட்டியில் செவ்வாய்க்கிழமை கூடும் புளிச்சந்தைக்கு கொல்லிமலைப் புளி வரத்து தொடங்கியுள்ளது.

நாமக்கல் மாவட்டம், கொல்லிமலையில் உள்ள கிராமங்களில் நூற்றுக்கணக்கான புளியமரங்கள் உள்ளன. இதில், தற்போது புளி அறுவடை தொடங்கியுள்ளது. மலைக் கிராம மக்கள் புளியை அறுவடை செய்து, ஓடு உடைத்து, கூடைகளில் அடுக்கிக் கொண்டு தம்மம்பட்டி புளிச் சந்தைக்கு விற்பனைக்கு கொண்டு வருகின்றனர்.

வழக்கமாக பிப்ரவரி மாதத்தின் இறுதியில் புளி சீசன் தொடங்கும். ஆனால், நிகழாண்டு மார்ச் மாதத்தில் தான் தொடங்கியுள்ளது. இந்த நிலையில், செவ்வாய்க்கிழமை சந்தைக்கு கொல்லிமலையில் இருந்து 150 கூடைகளில் புளி விற்பனைக்காகக் கொண்டுவரப்பட்டது.

கொட்டையுள்ள கொல்லிமலைப் புளி கிலோ ரூ. 30 முதல் 35 வரையிலான விலையில் விற்பனையானது.

இதுகுறித்து கொல்லிமலையைச் சேர்ந்த பொதுமக்கள் கூறியது:

ஒரு கூடையில் 20 கிலோ முதல் 35 கிலோ வரை புளி இருக்கும். நிகழாண்டு புளி சீசன் ஏப்ரல் இறுதி வரையில் இருக்கும். வழக்கமாக புளி சீசன் தொடக்கத்தில் 250 கூடைகள் வரை விற்பனைக்கு வரும். ஆனால் விளைச்சல் சென்ற ஆண்டைவிட குறைவாக உள்ளதால்,

தற்போது, 150 கூடைகளில் மட்டும் புளி விற்பனைக்கு வந்ததுள்ளது என்றனர்.

**திருச்சியில் நாளை விவசாயிகள் குறைதீர்க் கூட்டம்**

திருச்சி மாவட்ட ஆட்சியரகத்தில் வெள்ளிக்கிழமை (மார்ச் 27) காலை 10.30 மணிக்கு விவசாயிகள் குறைதீர்க் கூட்டம் நடைபெறுகிறது.

விவசாயிகள், விவசாயச் சங்கப் பிரதிநிதிகள் கூட்டத்தில் பங்கேற்று வேளாண்மை, நீர்ப்பாசனம்,வேளாண் இடுபொருள்கள், வேளாண் கடனுதவிகள், விவசாய மேம்பாட்டுக்கான திட்டங்கள் குறித்து நேரிலோ, மனுக்கள் மூலமாகத் தெரிவிக்கலாம் என மாவட்ட ஆட்சியர் கே.எஸ்.பழனிச்சாமி புதன்கிழமை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

**அரியலூரில் நாளை விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

அரியலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வெள்ளிக்கிழமை (மார்ச் 27) நடைபெறவுள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் எ. சரவணவேல்ராஜ் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: அரியலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வெள்ளிக்கிழமை மாவட்ட ஆட்சியர் அலுவலக பிரதான கூட்ட அரங்கில் நடைபெறுகிறது. இந்தக் கூட்டத்தில் விவசாயிகள், முன்னோடி விவசாயிகள் மற்றும் விவசாய சங்கப் பிரதிநிதிகள் தங்கள் விவசாயம் சார்ந்த குறைகளை தெரிவிக்கலாம்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**விவசாயிகளுக்கு திறன் ஆக்கப்பயிற்சி**

உத்திரமேரூர்: ஏரி நீரை பயன்படுத்தி, பயிர் செய்யும் விவசாயிகள், நீர்த்தேக்கம் மற்றும் நீர்வரத்து பகுதிகளை பராமரிக்கும் முறையை செயல்படுத்துவது குறித்த பயிற்சி, நேற்று நடைபெற்றது. பெருங்கோழி மற்றும் வாடாதவூர் பகுதியில், ஏரி நீரை பயன்படுத்தி, பயிர் செய்யும் விவசாயிகளுக்கான திறன் ஆக்கப்பயிற்சி கூட்டம், உத்திரமேரூர் பொதுப்பணி துறை அலுவலக வளாகத்தில் நேற்று நடந்தது. ஏரி நீர் பயன்படுத்துவோர் சங்கம் சார்பில் நடந்த இந்த பயிற்சியில், ஏரியை பராமரிப்பது, நீர்வரத்து மற்றும் நீர் போக்கு கால்வாய்களை சீரமைப்பது குறித்து ஆலோசனை வழங்கப்பட்டது. நீர்வள ஆதாரத்துறை இளநிலை பொறியாளர் குமார், பயிற்றுனர்கள் சிங்காரவேலன், நடராஜன் மற்றும் மாதவன் ஆகியோர், பயிற்சி அளித்தனர்.

**விதை பரிசோதனை விவசாயிகளுக்கு அழைப்பு**

காஞ்சிபுரம்: சித்திரை பட்டத்தில், காய்கனி பயிர் செய்யும் விவசாயிகள், அதற்கான விதைகள் தரமுள்ளதாக இருக்கிறதா என, பரிசோதனை செய்து பயன்பெறுமாறு, மாவட்ட விதை பரிசோதனை அலுவலர் கேட்டுக் கொண்டுள்ளார். காஞ்சிபுரம் மாவட்டத்தில், அடுத்த மாதம் சித்திரையில், விவசாயிகள் காய்கனிகள் அதிகம் பயிரிடுவர். அதற்கான விதைகளின் தன்மை, வீரியம், முளைப்பு திறன் போன்றவற்றை பரிசோதனை செய்து, பயிரிட்டால் அதிக மகசூல் கிடைக்கும். விதைகள் முளைப்பு திறன், குறைந்தபட்சம், 60 சதவீதம் இருப்பதை உறுதி செய்ய வேண்டும். விவசாயிகள் தங்கள் விதைக்கும் விதையில், 10 கிராம் மாதிரி விதையை எடுத்து, காஞ்சிபுரம் விதை பரிசோதனை நிலையத்தில், 30 ரூபாய் செலுத்தி தை பரிசோதனை செய்து பயன் பெறலாம்.இவ்வாறு, அந்த செய்திக் குறிப்பில் கூறப்பட்டு உள்ளது.

**பல வண்ணங்களில் ஈச்சம் பழம்**

ஆர்.கே.பேட்டை: கோடையின் வெப்ப தாக்கத்தில், செடி, கொடிகள் காய்ந்துவரும் நிலையில், வெப்பத்தை தாங்கி வளரும் ஈச்ச மரங்கள், பல வண்ணங்களில் காய் காய்த்து வருகின்றன. வறட்சியை தாங்கி வளரும் மரம் ஈச்சமரம். தென்னை, பனை போன்ற மரங்களை ஒத்திருந்தாலும், முள் போன்ற தன் ஓலைகளால் அவற்றிலிருந்து மாறுபட்டு நிற்கிறது. கோடை காலத்தில் குலை தள்ளும்; இதன் பிஞ்சுகள் முதலில் சிவப்பு, பச்சை, அதை தொடர்ந்து மஞ்சள் என, அடுத்தடுத்து நிறம் மாறும். பழங்கள் பளபளக்கும் பழுப்பு நிறத்தில் இருக்கும். இளம் பிஞ்சுகளின் உள்ளே இருக்கும் கொட்டைகள், துவர்ப்பு சுவை கொண்டது. இதன் காய்களை வேக வைத்து சாப்பிடலாம். முதிர்ந்த காய்கள் பறிக்கப்பட்டு, தண்ணீரில் கொட்டி பழுக்க வைக்கப்படுகின்றன. இதன் சுவை, பேரீச்சம் பழத்தை போன்று இருக்கும். குலை தள்ளியதில் இருந்து அறுவடை வரை, பல வண்ணங்களில்

காண்போரை கவரும் விதத்தில் இருப்பதால், இதன் அழகு தற்போது நகரங்களிலும் பரவி வருகிறது.

**23,208 பேருக்கு 3,800 கறவை மாடுகள்: 77,632 ஆடுகள் வழங்கல்**

திருவள்ளூர்: திருவள்ளூர் மாவட்டத்தில், இலவச கறவை மாடு, ஆடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ், இதுவரை, 23,208 பேருக்கு 3,800 கறவை மாடுகள், 77,632 ஆடுகள் வழங்கப்பட்டுள்ளன. இதுகுறித்து கால்நடைத் துறை அலுவலர் ஒருவர் கூறுகையில், "மாவட்டத்தில் இதுவரை, 3,800 பேருக்கு தலா ஒரு கறவை மாடு வீதம், 3,800 மாடுகளும், 19,408 பேருக்கு தலா நான்கு ஆடுகள் வீதம், 77,632 ஆடுகள் வழங்கப்பட்டு உள்ளன. இதற்காக 37.49 கோடி ரூபாய் செலவாகி உள்ளது," என்றார்.

**தாண்டிக்குடியில் விளையும் "ஹாலந்து' வெள்ளரி**

தாண்டிக்குடி : தாண்டிக்குடி மலைப்பகுதியில் வெளிநாட்டு ஏற்றுமதி தரம் வாய்ந்த ஹாலந்து வெள்ளரி பசுமைக்குடிலில் விளைவிக்கப்படுகிறது.
திண்டுக்கல் மாவட்டம் தாண்டிக்குடியில் நிலவும் சீதோஷ்ண நிலை கொய்மலர் உற்பத்திக்கு சிறப்பாக இருக்கிறது. இருந்தபோதிலும் ஆய்வுக்காக பசுமைக்குடிலில் ஹாலாந்து நாட்டு வகையான பீட்-ஆல்பா வகை வெள்ளரியை பயிரிட்டுள்ளனர். நடவு செய்த 30 நாளில் பூக்கள் பூக்கும். தொடர்ந்து 45 வது நாள் முதல் காய்கள் அறுவடைக்கு தயாராகி 120 நாட்கள் பலனளிக்கும். ஒரு கொடியில் சாரசரியாக 10 கிலோ, காய் கிடைக்கும். ஓராண்டில் 3 முறை மகசூல் செய்து ஒரு மகசூலுக்கு ரூ. 2 லட்சம் செய்து ரூ.3 லட்சம் லாபம் ஈட்டலாம். தரணி பார்ம் நிறுவனர் மனோகரன் கூறியதாவது: இங்கிலீஷ் குக்கும்பர் என அழைக்கப்படும் வெளிநாட்டு ரகம் அதிக மகசூல் தரக்கூடியது. கால் ஏக்கரில் "பாலி ஹவுசி'ல் பயிரிட்டால் அதிகபட்சமாக 25 டன் கிடைக்கும்.

விலையை பொறுத்தமட்டில் கிலோ ரூ.20 முதல் 40 வரை கிடைக்கும். தேங்காய் நார் அமைத்து "குரோ பேக்' மூலம் விதைகள் நடவு செய்து சொட்டு நீர் பாசனம் மூலம் பராமரிப்பு செய்யப்படுகிறது. தண்ணீர் சத்து நிறைந்தும், நீரில் எளிதில் கலக்கும் நார்சத்தும் அதிகமுள்ளது. இதனால் ரத்த அழுத்தம், கொலஸ்ட்ரால் தவிர்க்கப்படுகிறது. ஐரோப்பிய நாடுகளில் இவ்வகைக்கு கிராக்கி உள்ளது. மேலும் சாலட், அழகு சாதன பொருட்கள் தயாரிப்புக்கு பயன்படுகிறது. பறிக்கப்படும் காய்களை கேரளாவிற்கு சப்ளை செய்கிறோம், என்றார்.

**திண்டுக்கல்லில் 2500 ஏக்கரில் பட்டுப்புழு வளர்ப்பு**

பழநி : பழநியில் பட்டுவளர்ச்சித் துறை சார்பில் அமைக்கப்பட்டுள்ள சமுதாய குழுவினருக்கு பயிற்சிமுகாம் நடந்தது.

மதுரை மண்டல பட்டுவளர்ச்சித் துறை துணை இயக்குனர் யோகமாலா தலைமை வகித்தார். ஓசூர் அரசு பட்டுவளர்ச்சி பயிற்சி பள்ளி முதல்வர் பிரின்ஸ் மோகன், உடுமலை பட்டுவளத்துறை விஞ்ஞானி புனிதவதி, பழநி பட்டுவளர்ச்சிதுறை உதவி இயக்குனர் சச்சினாந்தம் முன்னிலைவகித்தனர். இதில், தமிழகத்தில் கிருஷ்ணகிரி, உடுமலை, பழநி ஆகிய மூன்று இடங்களில் மட்டுமே பட்டுவளர்ச்சிதுறை சார்பில் சமுதாயகுழுக்கள் அமைக்கப்படுகிறது. திண்டுக்கல் மாவட்டத்தில் 2500ஏக்கர் பரப்பளவில் 1800 விவசாயிகள் பட்டுப் புழுவளர்ப்பில் ஈடுபட்டுள்ளனர். அதிகபட்சமாக பழநியில் 800 விவசாயிகள் உள்ளனர். அவர்களில் 20 பேர் கொண்ட சமுதாயகுழு அமைக்கப்பட்டு, தலைவர், செயலாளர் தேர்வுசெய்யவேண்டும். வங்கி கணக்கு துவங்கி, ரூ.1லட்சம் வரை இருப்புஇருந்தால், அந்த குழுவிற்கு ரூ.4லட்சம் விதைநிதி வழங்கப்படும். இதனை பட்டுச்செடி, புழு வளர்க்க தேவையான உரம், இயந்திரம் வாங்கவும், வீட்டு நிகழ்ச்சிகளுக்கு பயன்படுத்தலாம் என பயிற்சி முகாமில் தெரிவிக்கப்பட்டது.

**ஆட்டுக்கறி "ருசி'க்கு இணையான கறி "பலா'**

திண்டுக்கல் : ஆட்டுக்கறி "ருசி'க்கு இணையான சிறுமலை கறிப்பலா பிஞ்சுகள் திண்டுக்கல் காந்தி மார்க்கெட் பகுதியில் விற்பனைக்கு வந்து குவிந்துள்ளன.

ஜாதி பலா ரகங்கள் கொடைக்கானல், பண்ணைக்காடு, தாண்டிக்குடி, ஆடலூர், பன்றிமலை, சோலைக்காடு, சிறுமலை பகுதிகளில் அதிகமாக சாகுபடியாகிறது. பலாப்பழங்களை விட அதன் பிஞ்சுகளில் நார்சத்து அதிகமாக உள்ளது என நம்பப்படுகிறது.பலா பிஞ்சுகளை தோல் பகுதியை நீக்கிவிடுவர். பின்பு, நடுப்பகுதியில் இருக்கும் பிஞ்சு பகுதியை சிறு, சிறு துண்டுகளாக பிரித்து விடுவர். பின், ஆட்டுக்கறி மசாலாவை சமைப்பது போல் மசாலா சேர்த்து கறிப்பலா பிஞ்சு துண்டுகளை அதில் போட்டு பொறித்து சமைப்பர். சிலர் இதில் சாம்பார், பொரியல் உள்ளிட்டவைகளை சமைப்பர். அடுத்த பலாப்பழங்களின் விளைச்சல் அதிகரித்துள்ளதால் தற்போது கறிப்பலா பிஞ்சுகள் விற்பனைக்கு வந்துள்ளன.

சிறுமலை வியாபாரி சவுரியம்மா கூறுகையில், ""பெரும்பாலும் அசைவ பிரியர்கள் விரும்பி கறிப்பலாவை வாங்கி செல்கின்றனர். ஒவ்வொரு பிஞ்சுக்கு தகுந்தமாதிரி விலையை நிர்ணயிக்கிறோம். தற்போது ஒரு கறிப்பலா ரூ.25க்கு விற்பனையாகிறது. சிறுமலையிலிருந்து பலாப்பழங்களின் வரத்தும், கறிப்பலா பிஞ்சுக்களின் வரத்து அதிகரித்துள்ளது, என்றார்.

**ஊடுபயிராக வெங்காயம்**

சின்னசேலம்: சின்னசேலம் ஒன்றியத்தில் தொட்டியம், அனுமனந்தல், ஈரியூர், கருங்குழி உள்ளிட்ட 50 கிராமங்கள் உள்ளது. பருவ மழை இல்லாததால் கிணற்று நீரை பயன்படுத்தி மரவள்ளி, கரும்பு பயிர் செய்துள்ளனர். தண்ணீர் பற்றாக்குறையால் விவசாயிகள் வருடத்திற்கு ஒரு பருவம் மட்டும் தான் பயிர் செய்ய முடிகிறது. அதனால் விவசாயிகளுக்கு

குறைந்த லாபம் கிடைக்கிறது. இதனால் பல விவசாயிகள் ஊடுபயிர் செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். மரவள்ளியில் சின்ன வெங்காயத்தை ஊடு பயிராக செய்துள்ளனர். மரவள்ளி 10 மாத பயிராகும். சின்னவெங்காயம் 3 மாத பயிராகும். சின்னவெங்காயத்திற்கு இடும் உரங்கள் மரவள்ளிக்கும் பயன்படுகிறது. களை எடுத்தல் குறைகிறது. மரவள்ளிக்கு பாய்ச்சும் தண்ணீரே சின்னவெங்காயத்திற்கும் போதுமானது. மிக குறைந்த காலத்தில் விவசாயிகளுக்கு லாபம் கிடைக்கிறது. கூலி ஆட்கள் பற்றாக்குறை, வறட்சி, கூடுதல் லாபம் உள்ளிட்ட காரணங்களால் மரவள்ளி பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

**விதை உற்பத்தி பயிற்சி**

காரைக்குடி : செட்டிநாடு மானாவாரி வேளாண் ஆராய்ச்சி நிலையத்தில் சிவகங்கை மாவட்ட விவசாயிகளுக்கான "பயிறு வகைகள் மற்றும் விதை உற்பத்தி தொழில் நுட்பங்கள்' குறித்த பயிற்சி நடந்தது. உதவி பேராசிரியர் சிவப்பிரகாஷ் வரவேற்றார். விதைச்சான்று வேளாண் உதவி இயக்குனர் இளங்கோவன், சாக்கோட்டை வேளாண் உதவி இயக்குனர் மணிவண்ணன், தேவகோட்டை பாஸ்கரமணியன், உதவி பேராசிரியர்கள் கதிர்வேலன், சசிகலா, பரமசிவன் பேசினர். மண்ணியல் உதவி பேராசிரியர் கண்ணன் நன்றி கூறினார்.

**மானிய விலையில் மக்காச்சோள விதை**

சிவகங்கை : சிவகங்கை வட்டாரத்தில் வழுதானி, புதுப்பட்டி, முடிகண்டம், சேந்தி உடையநாதபுரம், மாத்தூர், படமாத்தூர், கண்டாங்கிபட்டி, மலம்பட்டி, மாங்குடி ஆகிய நீர்வடிப்பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு மக்காச்சோள விதை 80 சதவீத மானியத்தில் வழங்கப்படுகிறது. 80 சதவீத மானியக்தில் மரக்கன்றுகள் வழங்கப்படுகிறது. விவசாயிகள் இந்த வாய்ப்பை பயன்படுத்தி பயன் பெறலாம் என வேளாண்மை உதவி இயக்குனர் தனபாலன் தெரிவித்தார்.

**மரக்கன்று நடுதல்**

சிவகங்கை : உலக காடுகள் தினத்தை முன்னிட்டு நாட்டரசன்கோட்டை இளைஞர்கள் சார்பில் வீடுகள் தோறும் இலவச மரக்கன்று நடும் பணி நடந்தது. தெருக்களில் 500க்கும் மேற்பட்ட மரக்கன்றுகளை நட்டனர். இவர்களுக்கு, அரசனூர் வனத்துறையினர் மரக்கன்றுகளை இலவசமாக வழங்கினர்.